**கவனிக்க.**-இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2009/2010 ஆம் ஆண்டுக்கான மேல் நீதிமன்ற யூரிமார் பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1667 - 2010 අගෝස්තු මස 13 වැනි සිකුරාදා - 2010.08.13

*1667 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | 1272 | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1273 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒகத்து மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

## 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை சட்டத்தின் IV ஆம் பகுதியில் 32 (1) பிரிவின்கீழ் வடமேல் மாகாண கௌரவ ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனம்

| | | |
|---|---|---|
| 01 | திரு. டீ. எம். கே. சி. திசாநாயக<br>இ. நி. சே. III வகுப்பு | 2010.06.01 ஆந் திகதி கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சில் உதவி செயலாளர் பதவியில் வேலைப் பார்ப்பதற்காக |
| 02 | திரு. ஏ. டீ. அமரசிரி<br>இ. நி. சே. வகுப்பு I | 2010.06.21 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண சபை ஆணைக்குழுவில் செயலாளர் பதவிக்காக |
| 03 | திரு. எச். எம். பீ. பி. ஹேரத்<br>இ. நி. சே. வகுப்பு I | 2010.06.21 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் முதலமைச்சில் சிரேஷ்ட உதவி செயலாளர் பதவிக்காக |
| 04 | செல்வி ஏ. ஏ. யு. சகுன்தலா அதிகாரி<br>இ. நி. சே. வகுப்பு III | 2010.06.30 ஆந் திகதி கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண விவசாய, நீர்பாசன, கமநல அபிவிருத்தி மற்றும் மிருக உற்பத்தியும் அபிவிருத்தி அமைச்சில் உதவி செயலாளர் பதவிக்காக |
| 05 | திரு. ஜே. எம். ஆர். பி. ஜயசிங்ஹ<br>இ. நி. சே. வகுப்பு I | 2010.06.30 ஆந் திகதி கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் குருநாகல் மாநகர சபையில் பிரதி மாநகர ஆணையாளர் பதவிக்காக |
| 06 | திரு. ஆர். எம். ஆரியரத்ன<br>இ. தி. சே. வகுப்பு I | 2010.06.07 ஆந் திகதி கடிதத்தில் நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் பிரதான செயலாளர் அலுவலகத்தில் பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) பதவிக்காக |
| 07 | திரு. எச். பி. எம். எஸ். பீ. பதிராஜ<br>இ. க. சே. வகுப்பு I | 2010.06.28 ஆந் திகதி கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண இறைவரித் திணைக்களத்தில் கணக்காளர் பதவிக்காக |
| 08 | திரு. எச். எம். சிரிமெவன் ஹேரத்<br>இ. வி. சே. வகுப்பு II/I | 2010.06.16 ஆந் திகதி கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண, விவசாயத் திணைக்களத்தில் பிரதி விவசாய பணிப்பாளர் பதவிக்காக |
| 09 | திரு. என். எச். விமலரத்ன<br>இ. வி. சே. வகுப்பு II/I | 2010.06.16 ஆந் திகதி கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் புத்தளம் விவசாய திணைக் களத்தில் பிரதி விவசாய பணிப்பாளர் பதவிக்காக |
| 10 | திரு. டப்ளியு. எம். எஸ். வன்னிநாயக<br>இ. வி. சே. வகுப்பு II/I | 2010.06.16 ஆந் திகதி கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் கல்கமுவ வளைய உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் வளைய உதவி விவசாய பணிப்பாளர் பதவிக்காக |

| | | |
|---|---|---|
| 11 | திரு. டீ. ஏ. வனிகசேகர<br>இ. பொ. சே. வகுப்பு II/I | 2010.05.03 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண பாதை அபிவிருத்தி திணைக் களத்தில் பிரதி பணிப்பாளர் பதவிக்காக |

கௌரவ ஆளுநர் அவர்களது கூற்றுப்படி,

ஆர். ஏ. திலகரத்ன,
வடமேல் மாகாண ஆளுநரது செயலாளர்.

ஆளுநர் அலுவலகம்,
(வடமேல் மாகாணம்),
2010, யூலை மாதம் 23.

8-352

# மாகாண சபை அறிவித்தல்கள்

## களியாட்ட வரிக்கட்டளைச் சட்டம்

(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக்கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு பன்னல பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை குறித்த பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு வடமேல் மாகாணத்தின் வடமேல் உள்ளூராட்சி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதென்று குறித்த உட்பிரிவுக்கமைய இத்தால் வெளியிடப்படுகின்றது.

அதுல சரத் குமார விஜேசிங்ஹ,
முதலமைச்சரும் ;
நிதியும் திட்டமிடலும், நீதியும் சமாதானமும்,
உள்ளூராட்சியும் மனித வளமும்,
கல்வியும் கலாச்சார விவகாரமும், காணி, போக்குவரத்து,
சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை
தொடர்புபடுத்தல், கூட்டுறவு அபிவிருத்தி,
உணவு வழங்கலும் விநியோகமும் அமைச்சரும்.
(வடமேல் மாகாண மாகாண சபை).

வடமேல் மாகாண சபை அமைச்சு,
2010, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி.

### பிரேரணை

(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு பன்னல பிரதேச சபை சபையின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நடத்தப்படுகின்ற குறித்த கட்டளைச்சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் களியாட்ட நடவடிக்கைக்கு உட்பிரவேசிப்பதற்காக செய்யப்படுகின்ற கொடுப்பனவிலிருந்து (களியாட்ட வரி தவிர்ந்த) நூற்றுக்கு 10% சமமான வரியை விதித்து அறவிட வேண்டுமென்றும் இந்தப் பிரேரணை நிறைவேற்றமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவேண்டுமென்றும் பிரேரிக்கப்படுகின்றது.

அவ்வாறாயினும் இந்தப் பிரேரணை நிறைவேற்றமானது அமுலுக்கு வரும் முதல் இரு வருடங்களுள் திரைப்படமொன்றை கண்டு களிப்பதற்காக செலுத்தப்படுகின்ற கட்டணத்தின் மீது அறவிடப்பட வேண்டிய வரித்தொகை அவ்வாறு செலுத்தப்படுகின்ற கட்டணத்தின் நூற்றுக்கு ஏழு தசம் ஐந்து வீதமாக இருத்தல் வேண்டும்.

8-228

## அயகம பிரதேச சபை

### துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக் கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணை விதிகள் அயகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சபரகமுவ மாகாணம்.

சபரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2010.06.30.

### பொது நூல் நிலையங்களை முறைப்படுத்தல் மற்றும் நிருவகித்தல் தொடர்பான துணைவிதி

அயகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாழும் மக்களின் கல்வியை அபிவிருத்தி செய்தல், வாசிக்கும் ஆற்றலை மேம்படுத்தல், மக்களின் ஒழுக்கம் மற்றும் ஆளுமையை விருத்தி செய்தல், உல்லாச மற்றும் நிர்மாணத் தேவைகளை வழங்குவதற்காக பல்வேறு வளங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மூலம் பொது நூல் நிலையச் சேவையை முறைப்படுத்துவதற்காக அயகம பிரதேச சபையினால் இத்துணைவிதி விதிக்கப்படுகின்றது.

2. அயகம, பிரதேச சபையின் பொது நூல்நிலைய அதிகாரப் பிரதேசத்தின் மக்களின் தேவைகளுக்கேற்றவாறு கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகளுள் சில பிரிவுகள் அல்லது எல்லாப் பிரிவுகளும் அடங்கும்.

(i) வெளியே கொடுக்கும் பிரிவு ;
(ii) விமரிசனப் பிரிவு ;
(iii) சிறுவர் பிரிவு ;
(iv) தவணைச் சஞ்சிகைகள் மற்றும் செய்தித்தாள்கள் பிரிவு ;
(v) கல்விப் பிரிவு ;
(vi) புத்தகப் பாதுகாப்புப் பிரிவு ;
(vii) நடமாடும் மற்றும் கிளை நூலகங்கள் ;
(viii) ஏனைய தகவற் சேவைகள்.

3. அயகம பிரதேச சபையின் பொது நூல் நிலையத்தில் நூலகர் ஒருவர் இருத்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு நியமனம் செய்யப்படுபவர் பொது நூலகத்தின் அமைப்பு மற்றும் முகாமைத்துவம் என்பன முறைப்படி பேணுதல் தொடர்பில் பிரதேச சபைக்குப் பொறுப்பு கூறல் வேண்டும்.

4. பொது நூலகத்தின் மேற்பார்வை மற்றும் பொது நிருவாகத்திற்காக (இதனகத்து இதன்பின் 'நூலகக் குழு' என அறிமுகப்படுத்தப்படுகின்ற) நூலக ஆலோசனைக் குழுவொன்றிடம் பொறுப்பளிக்கப்படும்.-

(i) இக்குழு பிரதேச சபையினால் வருடாந்தம் நியமனம் செய்யப்படும். அதில் கீழ்க்குறிப்பிடப்படுபவர்கள் அடங்கியிருப்பார்கள் :-

* சபையின் தவிசாளர் ;
* பிரதேச சபையின் அங்கத்தவர்களுள் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பேர்களுக்கு மேற்படாத எண்ணிக்கையான உறுப்பினர்கள் ;
* சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாழும் மக்கள் பின்பற்றும் சமயங்கள் பிரதிநிதித்துவமாகும் வகையில் ஒவ்வொரு சமயத்தின் பேரிலும் ஒரு பிரதிநிதி வீதம் ;
* பிரதேச சபையினால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாழும் முக்கியமானோர்களுள் மூன்று பேர்களுக்குக் கூடுதலாகாத எண்ணிக்கையானோர்கள் ;
* பிரதேச சபையின் செயலாளர் ;
* சபையின் சனசமூக தொடர் உத்தியோகத்தர் ;
* பிரதேச சபையின் பிரதான நூலகத்தின் நூலகர் ;
* அதிகாரப் பிரதேசத்தின் பாடசாலை அதிபரொருவர் ;
* அதிகாரப் பிரதேசத்தின் சனசமூகச் சபையொன்றின் பிரதிநிதியொருவர்.

(ii) பிரதேச சபையின் தவிசாளர் பதவி அதிகாரத்தின் மூலம் குழுவின் தவிசாளராதல் வேண்டும். அத்துடன் அவர் குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை வகித்தல் வேண்டும். ஏதாவதொரு கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்காதிருக்கும் சந்தர்ப்பமொன்றில், சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களால் குழுவிலுள்ள உறுப்பினர்களுள் தேர்ந்தெடுத்துக்கொள்ளப்படும் ஒருவர் அக்கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும் ;

(iii) பிரதேச சபையின் செயலாளர், குழுவின் அழைப்பாளராதல் வேண்டும் ;

(iv) பிரதேச சபையின் பிரதான நூலகத்தின் நூலகர், குழுவின் செயலாளராதல் வேண்டும் ;

(v) கூட்டநடப்பெண் (நிறைவெண்) ஆனது, அங்கத்தவர்களின் எண்ணிக்கையின் 1/3 ஆக இருத்தல் வேண்டும் ;

(vi) ஏதாவதொரு கூட்டத்திற்கு தலைமைதாங்கும் உறுப்பினருக்கு ஓர் அடிப்படை வாக்கும், ஏதாவதொரு பிரச்சினை தொடர்பில் ஆதரவாகவும் எதிராகவும் வாக்குகள் சமமாக விருந்தால் தீர்ப்பு வாக்கொன்றும் இருக்கும்.

5. **அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளல்**:-

(i) நூலகச் சேவைகளை எதிர்ப்பார்க்கும் ஒவ்வொருவரும் சபையினால் காலத்துக்குக் காலம் பிரேரணைகள் அங்கீகரிக்கப்படுதல் மூலம் தீர்மானிக்கப்படும் கட்டணத்தை செலுத்தி நூலகப் பொறுப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பப்பத்திரத்தின் மூலம் அங்கத்துவம் பெறுவதற்காக விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் அவ்விண்ணப்பத்தை இங்கு கீழே குறிப்பிடும் ஒருவரைக்கொண்டு அத்தாட்சிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்:-

* வசிக்கும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் ;
* சமாதான நீதவான் ;
* பிரதேச சபையின் அங்கத்தவரொருவர் ;
* அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் பதவிநிலை உத்தியோகத்தரொருவர் ;
* பாடசாலை விண்ணபதாரியொருவராயின் அவ் விண்ணப்பதாரியின் வகுப்பாசிரியர்/பாடசாலை அதிபரின் சான்றிதழ்.

(ii) நூல்நிலைய அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் தகைமைகள் இருத்தல் வேண்டும் :-

* சாதாரண அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வசிக்கின்ற ஒருவராக அல்லது சொத்துரிமை உடைய ஒருவராக அல்லது நிரந்தரத் தொழில் புரிபவரொருவராக இருத்தல்;

* பாடசாலை அங்கத்துவத்துக்காக 5 வயதுக்குக் கூடுதலான வொருவராகவும் அதிகாரப்பிரதேசத்தின் பாடசாலையொன்றில் அல்லது பிரிவெனாவொன்றில் கல்வி கற்கின்றவொருவராக இருத்தல் வேண்டும்.

(iii) **அங்கத்துவக் கட்டணம்**.- சாதாரண அங்கத்தவரொரு வருக்காக வருடாந்தக் கட்டணம் 100 ரூபாவாகும். வருடத்துக்கொருமுறை ரூபா 30 பணம் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளல் வேண்டும்.

பாடசாலை அங்கத்தவர்களுக்காக அங்கத்துவக் கட்டணம் ரூபா 50.00 ஆகும். வருடத்துக்கொருமுறை ரூபா 15.00 பணம் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறாயினும் குழுவின் சிபாரிசுகளின்படி சபையினால் காலத்துக்குக் காலம் பிரேரணைகள் அவமோதித்தல் மூலம் அங்கத்துவக் கட்டணம் தீர்மானிக்கப் படலாம். அதேபோன்று வெளியே கொடுக்கும் பிரிவைத்தவிர விமரிசனப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளை உபயோகிப் பதற்காக குழுவின் சிபாரிசுகளின்படி அயகம பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று நூலகத்தின் அங்கத்துவமற்றவர்களிடமிருந்து அறவிடப் படலாம்.

(iv) பிணையாளர்கள் :

* பாடசாலை அங்கத்தவர்களுக்கு அவர்களது தாய்/தந்தை/பொறுப்பாளர்/பாடசாலை அதிபர்/வகுப்பாசிரியர் ஆகியோர்களுள் ஒருவர் பிணையாளராக இருத்தல் வேண்டும் ;

* சாதாரண அங்கத்தவர்களுக்கு வருடாந்தச்சம்பளம் பெறும் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமான உத்தியோகத்தரொருவர் அல்லது பிரதேசத்தின் பிரபு ஒருவர்/குடும்பத்தின் ஏனையவொரு அங்கத்தவர்/வரி செலுத்துபவரொருவர் ஒப்பமிடுதல் வேண்டும்.

6. புத்தகங்களை வெளியே கொடுக்கும் நூலகத்தின் அங்கத்தவரொருவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின்மூலம் ஒரு தடவையில் 2 புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அங்கத்தவரால் எடுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு புத்தகம் தொடர்பிலும் அவர் பொறுப்புகூறல் வேண்டும்.

7. நூலகத்தின் அங்கத்தவரொருவரால் வெளியே எடுத்துச் செல்லப்பட்ட புத்தகமொன்று, அதைப்பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் நூலகப் பொறுப்பாளரிடம் மீள ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

8. துணைவிதியின் 07 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள 14 நாட்கள் கால எல்லைக்குள் ஏதாவதொரு புத்தகத்தை நூலகப் பொறுப்பாளரிடம் மீள ஒப்படைப்பதைப் புறக்கணிக்கும் சந்தர்ப்பமொன்றில், அப்புத்தகத்தை மீள பொறுப்பளிக்க வேண்டிய திகதியை மீறிச்செல்லும் ஒவ்வொரு தினத்துக்காகவும் ரூபா 2.00 வீதமும் பாடசாலை அங்கத்தவர்களுக்காக ரூபா 1.00 வீதமும் தண்டப்பணம் செலுத்துவதற்கு அல்லது குழுவின் சிபாரிசுகளின்படி சபையினால் காலத்துக்குக் காலம் பிரேரணைகள் அங்கீகரிக்கப்படுதல்மூலம் தீர்மானிக்கப்படும் ஏதாவதொரு பணத்தொகை தண்டப்பணமாக செலுத்துவதற்கு விதிக்கப்படும்.

9. வெளியே கொண்டு செல்லப்பட்ட புத்தகமொன்று 14 நாட்கள் காலஎல்லை கடந்த பின்பு 30 நாட்களுக்குள்ளும் மீளப்பொறுப்படைத்தலை அங்கத்தவரொருவரால் புறக்கணிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அப்புத்தகம் காணாமற்போனதாகக் கருதப்படும்.

10. அவ்வாறு புத்தகமொன்று காணாமற்போனதாகக் கருதப்படும் சந்தர்ப்பமொன்றில் அப்புத்தகத்தின் பெறுமதியையும் அப்புத்தகத்தின் பெறுமதியின் 25% வரையிலான திணைக்கள கட்டணமொன்றும் துணைவிதியின் 08 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தண்டப்பணமும் தொடர்புடைய அங்கத்தவரால் செலுத்தப்படல் வேண்டும். அங்கத்தவரொருவரால் வெளியே கொண்டு செல்லப்பட்ட புத்தகமொன்றுக்கு பங்கம் விளைவித்தலோ அதைத் திரிபுபடுத்தலோ கூடாது.

11. வெளியே கொண்டு செல்வதற்கு எதிர்பார்க்கும் புத்தகமொன்றுக்கு ஏற்பட்டுள்ள பங்கம் அல்லது திரிபு தொடர்பில் நூலகப் பொறுப்பாளருக்கு அறிவிப்பது ஒவ்வொரு அங்கத்தவரினதும் கடமையாகும். அத்தகைய பங்கம் அல்லது திரிபுபடுத்தல் தொடர்பில் நூலகப் பொறுப்பாளருக்கு அறிவிப்பதை எவரேனுமொரு அங்கத்தவரால் புறக்கணிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அப்புத்தகம் பங்கம் அல்லது திரிபு இல்லாமல் விநியோகிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

12. அங்கத்தவரொருவரால் மீள பொறுப்பளிக்கப்பட்ட புத்தகமொன்று திரும்பவும் விநியோகிப்பதற்குத் தகுதியற்ற வகையில் அவரால் பங்கம் விளைவிக்கப்பட்டு அல்லது திரிபுபடுத்தப்பட்டுள்ளதைப்பற்றி நூலகப் பொறுப்பாளர் திருப்தியடையும் சந்தர்ப்பமொன்றில் அப்புத்தகத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான செலவை வழங்குவதற்கு அந்த அங்கத்தவர் கட்டுப்பட்டிருப்பார். அப்புத்தகம் மீளப் பெற்றுக்கொண்டதன் பின்பு பங்கமேற்பட்ட புத்தகத்தில் "பங்கமேற்பட்ட புத்தகமொன்றாக விற்பனை செய்யப்பட்டது" என முத்திரையிட்டு அந்த அங்கத்தவரிடம் வழங்குதல் வேண்டும்.

13. * நூலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகமொன்று எந்தவொரு அங்கத்தவராலும் பிறருக்குக் கொடுக்கப் படாதிருத்தல் வேண்டும்.

* மேலே 13 (1) துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறும் எந்தவொரு அங்கத்தவரினதும் அங்கத்துவம் இல்லாதொழியும்.

14.* அசாத்தியமான அல்லது தொடுநோயினால் பாதிக்கப் பட்டுள்ள எவரேனுமொரு நபரினால் பாவிக்கப்பட்டுள்ளது பற்றி தாம் அறிந்த எந்தவொரு புத்தகமும் எந்தவொரு அங்கத்தவராலும் மீளப் பொறுப்பளிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

* வெளியே கொண்டு செல்லப்பட்ட புத்தகமொன்று அசாத்தியமான அல்லது தொடுநோயொன்றினால் பாதிக்கப் பட்டுள்ள அங்கத்தவரொருவரால் பாவனை செய்யப் பட்டுள்ளவொரு சந்தர்ப்பத்தில் அப்புத்தகத்தை அழித் தொழித்தல் வேண்டும். மீள அத்தகைய புத்தகமொன்றைப் பெற்றுக்கொள்ளும் செலவை அந்த அங்கத்தவரால் நூலகப் பொறுப்பாளருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

15. ஏதாவதொரு புத்தகத்தை எந்த அங்கத்தவருக்குப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பது தொடர்பில் இரண்டு அங்கத்தவர்களுக் கிடையே அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டால் அத்தகைய கருத்து வேறுபாடுகள் நூலகப் பொறுப்பாளரால் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

16. வெளியே கொடுக்கப்படும் புத்தகமொன்று எவரேனுமொரு அங்கத்தவரால் கேட்கப்படுமிடத்து அதை அவருக்கு வழங்குதல் வேண்டும். அத்துடன் மேற்படி புத்தகம் ஏற்கனவே விநியோகிக்கப் பட்டிருந்தால் கேட்டவரின் அல்லது கேட்டவர்களின் பெயர்களை எதிர்பார்ப்பு அட்டவணையில் குறிப்பிட்டு அப்புத்தகம் நூலகத்திற்குக் கிடைத்தபின்பு அந்தந்த நபர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நூலகப் பொறுப்பாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

17. புத்தகங்களை வெளியேகொடுக்கும் நூலகம் ஞாயிற்றுக் கிழமை அரசாங்க விடுமுறைத்தினம் மற்றும் ஆகக்குறைந்தது 07 நாட்களுக்குமுன் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்பு தொகைமதிப்பிடுவதற்காக குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய எவையேனும் தினங்கள் தவிர தினந்தோறும் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 5.00 மணி வரை திறந்து வைக்கப்படல் வேண்டும். ஆயினும் சபையின் கருத்தின்படி நூலகத்தைத் திறந்து வைக்கும் நேரங்களும், தினங்களும் மாற்றப்படலாம்.

18. **விமரிசனப்பிரிவு:-**

* நூலகப் பொறுப்பாளரின் அனுமதியுடன் விமரிசனப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் ஒப்பமிட்டு விமரிசனப் புத்தகங்களை பரிசீலித்தல் வேண்டும்.

* வாசிப்பதற்காக தன்னிடம் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு புத்தகம், சஞ்சிகை அல்லது ஏனைய எந்தவொரு பொருளும்

விமரிசனப் பிரிவிற்கு வெளியே கொண்டு செல்லப் படாதிருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் நிழற்படப்பிரதி யெடுத்தற் சேவையொன்று செயற்படுமாயின் நூலகப் பொறுப்பாளரின் அனுமதியுடனும் அவரது பொறுப்பின் கீழும் தொடர்புடைய ஆவணத்தின் தேவையான பக்கங்களை குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்தி பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் எவருக்கும் இடமளிக்கப்படல் வேண்டும்.

*19.* **வாசிகசாலை :**

* வாரத்தில் ஒவ்வொரு நாளிலும் மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 5.00 மணிவரை அல்லது சபையினால் தீர்மானிக்கப் படக்கூடிய தினங்களிலும் நேரங்களிலும் திறந்து வைக்கப் படும். வாசிகசாலை எவராலும் உபயோகிக்கப்படலாம். அதற்காக வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் தமது பெயரையும் வந்த நேரத்தையும் குறிப்பிட்டு ஒப்பம் வைத்து வாசிகசாலையின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

* வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசிக சாலைக்குச் சொந்தமான ஏதாவதொரு செய்திப் பத்திரிகை, வாரப் பிரசுரம், சஞ்சிகை, வரைபடம் அல்லது நூலகத்தின் ஏனைய பொருட்களுக்கும் பங்கமேற்படுத்தாதிருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றை வெளியே கொண்டு செல்லலும் கூடாது.

*20.* **எந்தவொருவரும் :**

* பொது நூலகத்திற்குள் அல்லது அதைச்சூழவுள்ள இடங்களில் ஒழுக்கமற்ற விதத்தில் அல்லது ஏனையோர் களுக்கு இடையூறுகள் ஏற்படக்கூடிய விதத்தில் நடந்து கொள்ளாதிருத்தல் வேண்டும் ;

* நூலகத்தில் அல்லது அதன் சூழலில் உள்ள பிரதேச சபையின் ஏதாவதொரு கட்டிடத்தின் ஒரு பகுதிக்கு அல்லது ஏதாவதொரு சொத்துக்கு கேடுகளை விளைவித்தலோ அல்லது ஏதாவதொரு வகையில் அவற்றைத் திரிபு படுத்தலோ கூடாது.

* நூலகத்தைத் திறந்து வைக்கும் நேரத்திற்குப் பின்பு மேற்படி நூலகத்தில் தங்கிநிற்றல் அல்லது காரணமின்றி அங்கு இருத்தல் என்பன கூடாது.

* நூலகத்தில் மதுபானம் அருந்துதல், புகைத்தல் அல்லது துப்புதல் என்பன கூடாது.

* நூலகத்தில் தாயக்கட்டை, சீட்டுக்கூட்டம் என்பனவற்றை உபயோகித்து சூது விளையாடுதல் கூடாது.

* நூலகத்திற்குள் சத்தமிடுதல், பாட்டுப்பாடுதல் அல்லது ஏனைய ஒலிகளை ஏற்படுத்தல் அல்லது கையடக்கத் தொலைபேசிகளை உபயோகிப்பதன் மூலம் நூலகத்தை உபயோகிப்பவர்களுக்கு இடையூறுகளை விளைவிக்கா திருத்தல் வேண்டும்.

* அசுத்தமான விதத்தில் பொது நூலகத்திற்கு உட்பிரவேசிக் காதிருத்தல் வேண்டும்.

* நூலகத்திற்கு எந்தவொரு விலங்கையும் கொண்டு வராதிருத்தல் வேண்டும்.

* நூலகத்திற்குள் நித்திரை கொள்ளல் அல்லது உணவுகளை உட்கொள்ளல் என்பன கூடாது.

* நூலகப் பொறுப்பாளருக்கு அல்லது நூலகப் பொறுப் பாளரின் உத்தரவின்படி செயல்புரிகின்ற ஏனையவொரு வருக்கு இத்துணைவிதியின்கீழ் அவரது அதிகாரங்களை சட்டரீதியில் செயற்படுத்தும்போது அதற்கு இடையூறுகளை ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும்.

*21.* ஏதேனுமொரு அசாதாரணமான தொடுநோயினால் அல்லது தோல் நோயினால் பீடிக்கப்படுகின்ற அல்லது அண்மைக்காலத்தில் பீடிக்கப்பட்ட அல்லது தற்போது பீடிக்கப்பட்டுள்ள ஒருவரை கவனிப்பவரொருவர் அத்தகைய நோய் பரவும் காலஎல்லை முடிவடையும்வரை பொது நூலகத்திற்கு வராமல் இருத்தல் வேண்டும்.

*22.* இத்துணைவிதிகளை மீறுதல் தொடர்பில் அத்தகைய ஒவ்வொரு மீறுகைக்காகவும் ரூபா 750 க்குக் கூடுதலாகாத தண்டப்பணத்தைச் செலுத்துவதற்கும் அம்மீறுகை தொடர்ந்தும் செய்யப்படும் சந்தர்ப்ப மொன்றில் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றில் அந்தந்த குற்றங்கள் தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்ட பின்பு அம்மீறுகை மீது அவதானம் செலுத்தி தவிசாளரால் அல்லது அதிகாரம் பெற்ற ஏனையவொரு உத்தியோகத்தரால் எழுத்துமூலமாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்பும் மேன்மேலும் அக்குற்றம் செய்யப்படும் ஒவ்வொரு தினத்துக்காகவும் ரூபா 250 க்குக் கூடுதலாகாத மேலதிக தண்டப்பணத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

*23.* சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இத்துணைவிதியின் விவகாரங்களுக்காக 'தவிசாளர்' என்பது அயகம பிரதேச சபையின் தவிசாளரையும், 'செயலாளர்' என்பது அயகம பிரதேச சபையின் செயலாளரையும் 'நூலகர்' என்பது சபரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும் நூலகச் சேவைக்குட்பட்ட பிரதேச சபையின் பொது நூல்நிலையம் பொறுப்பாகச் செயல்புரியும் பிரதான உத்தியோகத்தரை அல்லது அப்பதவியில் செயல்புரியவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏனையவொரு உத்தி யோகத்தரையும் பொருட்படுத்தும்.

நூலகப் பொருட்கள் என்பது.- எழுத்துமூல, அச்சிடப்பட்ட, கட்புல, செவிப்புல மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பொருட்படுத்தும்.

*24.* இத்துணைவிதியின் ஏதாவதொரு பகுதியில் பொருள்கூறல் தொடர்பில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இதன் சிங்களப் பிரதி அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேலோங்கி செயற்படல் வேண்டும்.

*8-229/1*

---

***அயகம பிரதேச சபை***

*துணை விதிகள்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் (.......) ஆம் உட்பிரிவின்கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள்*

சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக் களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணை விதிகள் அயகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சபரகமுவ மாகாணம்.

சபரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2010.06.30.

**பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வரி அறவிடுதல் தொடர்பான தகவல்கள் மற்றும் தவணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதி அயகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள வியாபாரத் தொழில்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பில் அனுமதிப்பத்திரமொன்றை வழங்கி வரியொன்றை, கூலியொன்றை அல்லது ஏனைய ஏதாவதொரு கட்டணத்தை அறவிடுதல் தொடர்பில் தகவல்கள் மற்றும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான துணைவிதியென அறிமுகப்படுத்தப் படும்.

2. இத்துணைவிதியின் மூலம் அறவிட்டுக்கொள்ளக்கூடிய வரி, கூலி அல்லது ஏனையவொரு கட்டணத்தை அறவிட்டுக்கொள்வதற்காக தொடர்புடைய தகவல்கள் மற்றும் தவணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளலை முறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் பேணுதல் என்பன இதன்மூலம் எதிர்ப்பார்க்கப்படும்.

3. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் செல்லுபடியாகும்.

(அ) இத்துணைவிதி அயகம பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள மற்றும் இங்கு 1 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பில் ஏற்புடையதாக இருக்கும்.

4. 3 (அ) விதியின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தம்மால் நடத்திச் செல்லப்படும் வியாபாரங்கள், கைத்தொழில்கள் தொடர்பில் அயகம பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய வரி, கூலி அல்லது ஏனையவொரு கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்காகத் தேவையாகுமென கருதக்கூடிய அயகம பிரதேச சபையின் மூலம் விதித்துரைத்துக் கேட்கப்படும் ஏதாவதொரு அறிக்கை அல்லது தகவல் வழங்குவதற்கு மேலே 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள அனை வரும் கட்டுப்பட்டிருப்பார்கள்.

5. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பில் செயலாளரால் அறிவித்தல் கொடுக்கப்பட்டு அந்த (அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அயகம பிரதேச சபைக்கு அஞ்சல் மூலம், பதிவஞ்சல்மூலம் அல்லது கைமூலம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். கை மூலம் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆவணமும் சபையின் செயலாளரிடம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் பொறுப்பளிக்கப்படல் வேண்டும்.

6. மேலே குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் 30 நாட்களுக்குள் தம்மால் பெற்றுக்கொடுக்கப்பட்ட தகவல்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பில் ஆவணங்களைப் பெற்றுக்கொண்டதென்பதற்கு அயகம பிரதேச சபையினால் எழுத்துமூலமாக, பற்றுச்சீட்டொன்றின் மூலமாக அல்லது ஏனையவொருவகையில் அத்தாட்சிப்படுத்துவது சபையின் பொறுப் பாகும்.

7. மேற்கூறிய 30 தினங்களுக்குள் தொடர்புடைய தகவல்கள் கிடைக்காதிருப்பின் மேற்படி தகவல்கள் சபைக்குத் தேவைப்படுமெனக் கருதப்பட்டால் சபையின் தவிசாளரின் அல்லது செயலாளரின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரொருவருக்கு தொடர்புடைய வியாபாரத்தளங்கள் மற்றும் கைத்தொழில் நிலையங்களுக்குச் சென்று ஏற்புடைய தகவல்கள் மற்றும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வ தற்காக அல்லது பரிசோதிப்பதற்காக இத்துணைவிதி மூலம் இடமளிக்கப்பட்டுள்ளது.

8. இத்துணைவிதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதிக்குப்பின்பு ஆரம்பிக்கப்படும் கருத்திட்டமொன்று/கைத்தொழி லொன்று தொடர்பில் அதன் உரிமையாளரால் அல்லது முகாமை யாளரால் அவ்வாறு ஆரம்பிக்கப்பட்டு 30 நாட்கள் செல்வதற்கு முன்னர் பிரதேச சபைக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

9. குறிப்பிட்டவொரு இடத்தில் நடத்திச் செல்லப்படும் வியாபார மொன்றில்/கைத்தொழில் ஒன்றில் மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டால் அம்மாற்றம் ஏற்பட்டு 30 நாட்கள் செல்வதற்குமுன் அதைப்பற்றி மேற்கூறிய இடத்தின் உரிமையாளரால் அல்லது முகாமையாளரால் பிரதேச சபையின் தவிசாளரிடம் அல்லது செயலாளரிடம் அறிவிக்கப் படல் வேண்டும்.

10. ஒரே இடத்தில் பல வியாபாரங்கள்/கைத்தொழில்கள் மற்றும் தொழில்கள் நடத்திச் செல்லப்படுமாயின் அவற்றுடன் தொடர்புடைய தகவல்களை 2 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின்மூலம் வெவ்வேறாக வழங்குவது தொடர்புடைய வியாபாரத் தொழிலின்/ கைத்தொழிலின் உரிமையாளரின் பொறுப்பும் கடமையுமாகும்.

11. இத்துணைவிதியின் மூலம் கேட்கப்பட்டுள்ள விபரங்கள் அல்லது அறிக்கைகள் குறிப்பிட்ட காலஎல்லைக்குள் பெற்றுக் கொடுப்ப தற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, புறக்கணித்தல் அல்லது பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல் என்பன குற்றங்களாவதுடன் எவரேனுமொருவர் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டால் 750 ரூபாவுக்குக் கூடுதலாகாத அபராதமும், குற்றவாளியாக்கப்பட்ட பின்பும் அக்குற்றம் மேன்மேலும் செய்யப்படு மாயின் அக்குற்றம் தொடர்பில் அவதானம் செலுத்தி தவிசாளரால் அல்லது செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரால் எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்ட பின்பும் அக்குற்றம் செய்யப்படுமாயின் அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு தினத்துக்காகவும் 250 ரூபாவுக்குக் கூடுதலாகாத மேலதிக அபராதமும் விதிக்கப்படும்.

12. **பொருள் கூறல் :**

* சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இத்துணைவிதியில் 'சபை' என்பது அயகம பிரதேச

சபையையும், 'தவிசாளர்' என்பது அயகம பிரதேச சபையின் தவிசாளர் பதவியில் கடமை புரிபவரையும் ;

* 'செயலாளர்' என்பது அயகம பிரதேச சபையின் செயலாளர் பதவியில் கடமை புரிபவரையும் ;
* 'அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்' என்பது பிரதேச சபையின் தவிசாளரால் அல்லது செயலாளரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எனவும் பொருட்படுத்தும் ;
* இங்கே 'மொத்த விற்பனை வரவு' என்பது ஏதாவதொரு வியாபாரத்தின் அல்லது கைத்தொழிலின் மூலம் கிடைக்கப் பெறும் எல்லாப் பெறுகைகளையும் பொருட்படுத்தும் ;
* 'வியாபாரம்' என்பது ஏதாவதொரு பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்தல், வழங்குதல் அல்லது விற்பனை செய்தல் ஆகிய செயல்களைச் செய்யும் நபரொருவரை, குழுவொன்றை அல்லது நிறுவனத்தைக் குறிக்கும்.

13. இத்துணைவிதியின் தமிழ், ஆங்கிலப் பிரதிகளுக்கிடையே பொருள்கூறுகையில் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்களப் பிரதியே செல்லுபடியாதல் வேண்டும்.

**1 ஆம் அட்டவணை**

* இலங்கை சுற்றுலாத்துறைச் சபையில் பதிவு செய்யப் பட்டுள்ள அல்லது அனுமதிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் அல்லது தங்குமிடங்கள் ;
* இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மின்சார நிலையங்கள் ;
* தொழிற்சாலைகள் ;
* ஆடைத்தொழிற்சாலைகள் ;
* வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் ;
* சிறப்பு வியாபாரத்தளங்கள் ;
* பதிவுசெய்யப்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் ;
* தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் ;
* சாரதி பயிற்றுநர் நிறுவனங்கள் ;
* பணம் வைத்தல், கடன் கொடுத்தல் ஆகிய விவகாரங்களை மேற்கொள்ளும் எல்லா நிதி நிறுவனங்கள் ;
* காப்புறுதி நிறுவனங்கள் ;
* கணக்காய்வு நிறுவனங்கள் ;
* தனியார் வைத்திய ஆய்வுகூடங்கள் ;
* சுயாதீன ஒப்பந்த நிறுவனங்கள் ;
* ஏல விற்பனையாளர்கள் மற்றும் தரகர்கள் ;
* மாணிக்கக்கல் வியாபாரிகள் ;
* கொன்கிரீட் வேலைத்தளங்கள் ;
* வியாபாரப் பதிவுச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏனைய எல்லா தொழில் முயற்சிகள்.

**2 ஆம் அட்டவணை**

01. உரிமையாளரின் பெயர் :----.
02. அடையாள அட்டை இலக்கம் :----.
03. முகவரி :----.
04. வியாபார நிலையத்தின் வருடாந்த பெறுமதி
   (i) மதிப்பீட்டிலக்கம் :----.
   (ii) கடந்த ஆண்டில் மொத்த விற்பனை வரவு/பெறுகைகள் :----.
05. வியாபாரத்தின்/கைத்தொழிலின்/தொழிலின் தன்மை :----.
06. வியாபாரத்தினால்/கைத்தொழிலினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் தொழிலொன்றாயின் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் (விபரங்கள் பிற்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன) :----.
07. சேவையிலீடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை :----.
08. வியாபாரம்/கைத்தொழில்/தொழில் ஏனைய திணைக்களமொன்றின்கீழ் அல்லது நிறுவனமொன்றின்கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதுபற்றிய விபரங்கள் :----.
09. ஏனைய விபரங்கள் :----.

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா விபரங்களும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிகூறுகிறேன்.

-----,
கையொப்பம்,
(வியாபாரத்தின்/கைத்தொழிலின்/தொழிலின் உரிமையாளர்)

திகதி :-----.

8-229/2

---

## அயகம பிரதேச சபை

### துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணை விதிகள் அயகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சபரகமுவ மாகாணம்.

சபரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2010.06.30.

### வாகனங்கள் நிறுத்தி வைத்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் முறைப்படுத்தல் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதி அயகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் வாகனங்கள் நிறுத்தி வைத்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் முறைப்படுத்தல் தொடர்பான துணைவிதி என அறிமுகப்படுத்தப்படும்.

*2.* மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக இதனகத்து இதன்பின் பொது நிறுத்தி வைக்குமிடங்கள் எனக்குறிப்பிடப்படுகின்ற இடங்களாக அயகம பிரதேச சபையின் எல்லைக்குள் ஏதாவதொரு இடம் ஒதுக்கி வைக்கப்படலாம்.

*3.* எந்தவொருவராலும் பொது நிறுத்தி வைக்குமிடமொன்றில் மோட்டார் வாகனமொன்றல்லாத ஏனையவொரு வாகனம் நிறுத்தி வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

*4.* இங்கு கீழே காட்டப்பட்டுள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின்படி கட்டண மொன்றைச் செலுத்தி தவிசாளரால் இக்கருமத்துக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்று தன்னுடைமையில் இருந்தாலன்றி எந்தவொருவராலும் பொது நிறுத்தி வைக்குமிட மொன்றில் மோட்டார் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

*5.* நான்காம் துணைவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் அந்த அனுமதிப்பத்திரம் எந்த மோட்டார் வாகனம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதோ அந்த மோட்டார் வாகனத்தின் அறிமுக இலக்கம் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அந்த அனுமதிப்பத்திரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலஎல்லைக்கு மாத்திரம் செல்லுபடியாதல் வேண்டும்.

*6.* பொது நிறுத்தி வைக்குமிடமொன்றில் நிறுத்தப்பட்ட ஏதாவதொரு வாகனத்தின் உரிமையாளரிடமிருந்து அல்லது சாரதியிடமிருந்து அந்த வாகனம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும்படி பொலிஸ் உத்தியோகத்தரொருவரால், வாகனக் கட்டுப்பாட்டாளரொருவரால் அல்லது இக்கருமத்துக்காக தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரால் கேட்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரிசோதிப்பதற்காக மேற்படி உரிமையாளரால் அல்லது சாரதியினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*7.* ஏதாவதொரு பொது நிறுத்தி வைக்குமிடம் ஏதாவதொரு குறிப்பிட்ட வகுப்பின் அல்லது வர்க்கத்தின் மோட்டார் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளவொரு வேளையில் எந்தவொருவராலும் அந்த நிறுத்தி வைக்குமிடத்தில் மேற்படி வகுப்பிற்கு அல்லது வர்க்கத்திற்கு உட்படாத எந்தவொரு வாகனமும் நிறுத்தி வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

*8.* பொது நிறுத்தி வைக்குமிடமொன்றிற்கு உட்பிரவேசிக்கின்ற அல்லது அவ்விடத்திலிருந்து வெளியேறுகின்ற ஏனைய ஏதாவதொரு வாகனத்திற்குத் தடையேற்படக்கூடிய விதத்தில் எந்தவொருவராலும் பொத நிறுத்தி வைக்குமிடமொன்றில் மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

*9.* அரசாங்கத் திணைக்களமொன்றின் அல்லது கூட்டுத்தாபன மாக்கப்பட்ட அல்லது கூட்டுத்தாபனமாக்கப்படாத சபையொன்றினால் மேற்படி அரசாங்கத்தின் திணைக்களத்துக்கு அல்லது கூட்டுத்தாபன மாக்கப்பட்ட அல்லது கூட்டுத்தாபனமாக்கப்படாத சபையொன்றிற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்படுவதற்காக இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்து வதிலிருந்து விடுவிக்கப்படலாம்.

*10.* இத்துணைவிதி ஒவ்வொரு தினத்திலும் மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 மணி வரை செயற்படும்.

*11.* தவிசாளரால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் இத்துணைவிதி வாரத்தின் ஏதாவதொரு தினத்தில் செயற்படுதலை இடைநிறுத்தப்படலாம். அத்துடன் இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண அளவுகளில் மாற்றங்கள் செய்யப்படலாம்.

*12.* (i) எந்தவொருவராலும் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் மோட்டார் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வொரு வேளையில் அந்த வாகனம் கழுவப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) வாகனத்தை அந்த தொடர்புடைய இடத்திலிருந்து வெளியேற்றிக் கொள்வதற்காகத் தேவைப்படும் பழுதுபார்த்தல்கள் தவிர்ந்த ஏனைய பழுதுபார்த்தல்கள் செய்யப்படாதிருத்தல் வேண்டும்.

*13.* மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடமொன்றில் எந்தவொருவராலும் விஷப்போதைப் பொருட்கள் உட்கொள்ளப்படுதல் அல்லது விற்பனை செய்யப்படுதல் அல்லது ஒழுக்கக்கேடான விதத்தில் நடந்துகொள்ளப்படுதல் என்பன கூடாது.

*14.* இத்துணைவிதி தொடர்பிலான எந்தவொரு மீறுகையும் குற்றமொன்றாவதுடன் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகப்பட்டால் மேற்கூறிய நபர் அக்குற்றம் தொடர்பில் 750 ரூபாவுக்குக் கூடுதலாகாத தண்டப்பணத் தொகையொன்றைச் செலுத்துவதற்கு ஆளாக்கப்படுவார். அக்குற்றம் அதன்பின்பு தொடர்ந்தும் செய்துகொண்டு செல்லப்படுமாயின் அக்குற்றம் தொடர்பில் அவதானம் செலுத்தி சபையின் தவிசாளரால், செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரால் எழுத்துமூலமாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்பும் அக்குற்றம் செய்யப்படும் ஒவ்வொரு தினத்துக்காகவும் 250 ரூபாவுக்கு மேற்படாத மேலதிக தண்டப்பணத் தொகையொன்றைச் செலுத்துவதற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

*15.* **இத்துணைவிதியில் :**

''தவிசாளர்'' என்பது அயகம பிரதேச சபையின் தவிசாளரைப் பொருட்படுத்தும்,

''சபை'' என்பது அயகம பிரதேச சபையைப் பொருட்படுத்தும்,

''மோட்டார் வண்டி'' ''மோட்டார் கோச் வண்டி'' ''மோட்டார் சைக்கிள்'' ''மோட்டார் வாகனம்'' ''லொறி வண்டி'' ''பஸ் வண்டி'' ''டிரக்டர்'' மற்றும் ''வாகனம்'' என்பனவற்றிற்கு மோட்டார் வாகனச்சட்டத்தின் (அத்தியாயம் 203) அவற்றிற்குக் கொடுக்கப் பட்டுள்ள பொருளே இருத்தல் வேண்டும்.

''வாகனக் கட்டுப்பாட்டாளர்'' என்னும் சொற்கள் நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு சபை சார்பில் அனுமதியை வழங்குவதற்கு சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் எனப் பொருள்படும்.

*16.* இத்துணைவிதியின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய பிரதிகளுக்கிடையே ஒவ்வாமை ஏதும் ஏற்பட்டால் சிங்களப் பிரதியே மேலோங்கி செயற்படல் வேண்டும்.

**01 ஆம் அட்டவணை**

| | முதலாவது மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கான கட்டணம் | முதலாவது மணித்தியாலயத்திலும் கூடிய ஆனால் 4 மணித்தியாலங்களுக்கு மேற்படாத ஒவ்வொரு மேலதிக அரை மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்காக | 4 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஒவ்வொரு அரை மணித்தியாலத்துக்கான கட்டணம் |
|---|---|---|---|
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| (அ) மோட்டார் சைக்கிள் | இல்லை | இல்லை | இல்லை |
| (ஆ) மோட்டார் வண்டி அல்லது மோட்டார் கோச் வண்டி | 20 0 | 10 0 | 10 0 |
| (இ) டேலர் ஒன்றுடனான டிரக்டர் அல்லது லொறி வண்டி | 30 0 | 10 0 | 10 0 |
| (ஈ) டேலரொன்றற்ற டிரக்டர் அல்லது ஏனைய வாகனம் | 20 0 | 10 0 | 10 0 |
| (உ) பஸ் வண்டி | 30 0 | 10 0 | 10 0 |

**02 ஆம் அட்டவணை**

| | மாதமொன்றுக்கு ரூபா ச. |
|---|---|
| (அ) முச்சக்கரவண்டி | 150 0 |
| (ஆ) மோட்டார் கார் அல்லது வேன் வண்டி | |
| (i) டீசல் உபயோகிக்கும் வண்டியொன்றாயின் | 200 0 |
| (ii) பெற்றோல் வாயு உபயோகிக்கும் வண்டியொன்றாயின் | 200 0 |
| (iii) சிறிய லொறியொன்றாயின் | 250 0 |
| (இ) டேலரொன்றுடனான அல்லது டேலரொன்றற்ற டிரக்டர் வண்டியொன்றுக்காக | 200 0 |
| (ஈ) பஸ்வண்டியொன்றுக்காக | 250 0 |

நகரத்தில் இருப்பவர்களுக்கு நிதமும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடமொன்று தேவைப்படுமாயின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் ஒரே தடவையில் செலுத்தப்படுவதன் மூலம் ஒதுக்கிக் கொள்ளப்படலாம்.

**03 ஆம் அட்டவணை**

| | மாதமொன்றுக்கான கட்டணம் ரூபா ச. | வருடமொன்றுக்கான கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| (அ) டேலரொன்றுடனான அல்லது டேலரொன்றற்ற டிரக்டர் | 200 0 | 2,000 0 |
| (ஆ) மோட்டார் வண்டி அல்லது மோட்டார் கோச் வண்டி | 250 0 | 2,500 0 |
| (இ) லொரி வண்டி | 200 0 | 2,000 0 |
| (ஈ) மோட்டார் சைக்கிள் | இல்லை | இல்லை |
| (உ) பஸ் வண்டி | 250 0 | 2,500 0 |

**04 ஆம் அட்டவணை**

வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்களாக சபையினால் இடைக்கிடையே பெயர்க் குறிப்பிடப்படும் இடங்கள் உட்படும்.

8-229/3

## அயகம பிரதேச சபை

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணை விதிகள் அயகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சபரகமுவ மாகாணம்.

சபரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2010.06.30.

### வாகனங்கள் நிறுத்தி வைத்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் முறைப்படுத்தல் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதி அயகம பிரதேச சபையின் தெருக்களில் ஓட்டப்படும் வாகனங்களின் எடை மற்றும் வேகத்தைக்கட்டுப்படுத்தல் மற்றும் ஓட்டத்தை முறைப்படுத்தல் தொடர்பான துணைவிதி என அறிமுகப் படுத்தப்படும்.

2. அயகம பிரதேச சபைத் தெருக்கள் என பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதும் ஏனையவொரு அதிகாரச்சபைக்குச் சொந்தமற்றதுமான பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள தெருக்களில் பாரமான வாகனப் போக்குவரத்தை முறைப்படுத்தல், கட்டுப்படுத்தல், ஓட்ட வேகம் மற்றும் எடை தொடர்பில் வரையறைகளை விதித்தல், தெருக்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல் என்பன இத்துணை விதியை விதிப்பதன் நோக்கமாகும்.

3. (i) இதனகத்து இதன்பின் அயகம பிரதேச சபையின் தவிசாளரால் வழங்கப்பட்ட முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்கள் செலுத்தப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப் பத்திரமொன்று வைத்திருந்தால் மாத்திரமே தவிர மேலே இரண்டாம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தெருவொன்றில் 02 தொன்களைவிடக்கூடிய பாரமுடைய டிப்பர் வண்டி, லொறி வண்டி, டிரக்டர் வண்டி, தெருக்களை நிர்மாணிக்க உதவும் பொறியொன்று ஓட்டப்படுவது அல்லது கல், மணல், சரளைக் கற்கள் ஆகிய கட்டிடப் பொருட்கள், ஏனைய கனிப்பொருட்கள், தேயிலைக் கொழுந்து அல்லது இறப்பர் சார்ந்த உற்பத்திப் பொருட்களை ஏற்றிச் செல்லல் என்பன செய்யப்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் இத்தெருக்களில் விலங்குகளைக் கொண்டு அல்லது டிரக்டர் வண்டிகள் மூலம் அல்லது ஏனைய முறைகளில் மரக்குற்றிகளை அல்லது ஏனைய பொருட்களை இழுக்கச் செய்தல் அல்லது இழுத்துச் செல்லல் என்பனவும் செய்யப் படாதிருத்தல் வேண்டும்.

(ii) வாயு அமுக்க ரயர்களற்ற எந்தவொரு வாகனமும் ஏனையவொரு வாகனத்தில் ஏற்றிக்கொண்டே தவிர பிரதேச சபையின் எந்தவொரு தெருவிலும் ஓட்டப்படாதிருத்தல் வேண்டும்.

4. பிரதேச சபைத் தெருவொன்றில் ஓட்டக்கூடிய ஆகக்கூடிய வேகம் மணித்தியாலமொன்றுக்கு 25 கி. மீற்றருக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5. (i) எவரேனுமொரு நபரினால் இத்துணைவிதியின் இரண்டாம் விதியில் பொருட்படுத்தப்பட்ட தெருவொன்றில் எவையேனும் கட்டிடப் பொருட்கள், விவசாய உற்பத்திகள் மரக்குற்றிகள் அல்லது இயந்திர உபகரணங்கள் ஏற்றிச் செல்லப்படுமாயின் அதற்காக ஆகக்குறைந்தது 03 நாட்களுக்கு முன்னராவது எழுத்து மூலமாக சபையின் தவிசாளரிடம் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ii) மேலே 5 (i) ஆம் பிரிவின்படி விண்ணப்பமொன்று கிடைத்த சந்தர்ப்பமொன்றில் தவிசாளரால், தொழில்நுட்ப உத்தியோகத்தரிட மிருந்து அல்லது தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரிடமிருந்து அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட கட்டணங்கள் மற்றும் பாதிப்பேற்படக்கூடிய அளவுக்கான போதியளவு பிணைப் பணத்தொகையொன்றும் பெற்றுக் கொள்ளப் படல் வேண்டும்.

(iii) மேலே 5 (ii) ஆம் துணைவிதியின்கீழ் பிணைப் பணமும் குறிப்பிட்ட கட்டணமும் அறவிட்டுக் கொள்ளப்பட்டு உடன்படிக்கை யொன்றைச் செய்துகொண்ட பின்பே தவிர ஏற்புடைய அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(iv) மேலே 5(iii) ஆம் துணைவிதியின்கீழ் பெற்றுக்கொள்ளும் பிணைப்பணத்தொகைகளை விடுவித்துத்தருமாறு கேட்கப்படும் சந்தர்ப்பமொன்றில் முதலில் 10% வீதத் திணைக்களக் கட்டணமும் அதன்பின்பு பாதிப்புகள் ஏதும் ஏற்பட்டிருப்பின் அவற்றின் நட்டத்தையும் கணக்கிட்டு அறவிட்டுக் கொண்டு மீதிப்பணத்தை மீளச்செலுத்தல் வேண்டும்.

(v) பாதிப்பினால் ஏற்பட்ட நட்டமானது, பிணைப்பணத் தொகையைவிடக் கூடுதலாக இருப்பின் அதற்காக மேலதிகப் பணத்தொகையையும் செலுத்துமாறு தொடர்புடைய நபருக்குப் பணிப்பிடுவது சட்டரீதியானதாகும். அதேபோன்று பாக்கியாகவுள்ள பணத்தைச் செலுத்துமாறு பணிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் பணம் செலுத்துதல் புறக்கணிக்கப்படுமாயின், தகுந்த நீதிமன்ற அதிகாரமுடைய நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடர்ந்து பாக்கிப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்குப் பிரதேச சபைக்கு அதிகார மிருக்கும்.

6. பிரதேச சபையுடன் அபிவிருத்தி வேலைகளுக்கு ஏற்புடைய உடன்படிக்கைகளைச் செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களால் தவிசாளரிடம் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கோரிக்கைகள் மூலம் இங்கு முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்துவதிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படலாம்.

7. இத்துணைவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் சோதிக்கும் அதிகாரம் பிரதேச சபையின் தவிசாளரால் அல்லது செயலாளரால் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரால் செயற்படுத்தப்படுவது சட்டரீதியானதாகும்.

8. இத்துணைவிதி தொடர்பிலான எந்தவொரு மீறுகையும் குற்றமொன்றாவதுடன் எவரேனுமொருவர் தகுந்த அதிகாரமுடைய நீதிமன்றமொன்றினால் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாக்கப்படும் போது ரூபா 750 க்குக் கூடுதலாகாத தண்டப்பணத் தொகையொன்றைச் செலுத்துவதற்கும், குற்றவாளியாக்கப்பட்ட பின்பும் அந்த மீறுகை செய்துகொண்டு செல்லப்படுமாயின் மேற்கூறிய மீறுகை தொடர்பில் அவதானம் செலுத்தி பிரதேச சபையின் தவிசாளரால் அல்லது செயலாளரால் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரால் எழுத்துமூலமான அறிவித்தலொன்று கையளிக்கப்பட்ட பின்பும் அக்குற்றம் செய்யப்படும் ஒவ்வொரு தினத்துக்காகவும் ரூபா 250 க்கு மேற்படாத மேலதிகத் தடைப் பணத்தொகையொன்றைச் செலுத்துவதற்கும் ஆளாதல் வேண்டும்.

9. இத்துணைவிதியில் பொருள்கூறல் தொடர்பில் ஒவ்வாமை ஏற்பட்டால் இதன் சிங்களப் பிரதியே அத்தகைய எச்சந்தர்ப்பத்திலும் மேலோங்கி செயற்படல் வேண்டும்.

10. இத்துணைவிதிக்கு விடயமாகின்ற எந்தவொரு கருமமும் இடைக்கிடையே திருத்திக்கொள்ளும் அதிகாரம் அயகம பிரதேச சபைக்கு இருக்கும்.

11. இத்துணைவிதியின் விவகாரங்களுக்காக ''சபை'' என்பது அயகம பிரதேச சபையையும், ''தவிசாளர்'' என்பது அயகம பிரதேச சபையின் தவிசாளரையும், ''செயலாளர்'' என்பது அயகம பிரதேச சபையின் செயலாளரையும், ''அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தர்'' என்பது அயகம பிரதேச சபையின் ஏனையவொரு உத்தியோகத்தரையும், கிராம உத்தியோகத்தரொருவரையும், பொலிஸ் உத்தியோகத்தரொருவரையும் பொருட்படுத்தும்.

### முதலாம் அட்டவணை

1. மணல், மண் மற்றும் ஏனைய கனிப்பொருட்களை ஏற்றிச் செல்லல் தொடர்பில் ஒருதடவைக்காக அறவிடப்படும் கட்டணங்கள்

| | ரூபா ச. |
|---|---|
| 1/2 கியுப் | 25 0 |
| 1 கியுப் | 50 0 |
| 2 கியுப் | 100 0 |
| 3 கியுப் | 150 0 |

3 கியுப்களைவிடக் கூடுதலாகும் ஒவ்வொரு கியுபுக்காகவும் ரூபா 10 வீதம் அதிகரிக்கப்படும்.

| | ரூபா ச. |
|---|---|
| 2. விறகு, மூங்கில் மரம் மற்றும் மரக்குற்றிகளை ஏற்றிச்செல்லல் | |
| டிராக்டர் ஒன்றுக்காக ஒரு தடவைக்கு | 200 0 |
| லொறி, டிப்பர், டிரக் வண்டியொன்றிற்காக ஒரு தடவைக்கு | 300 0 |
| யானைகளைக்கொண்டு மரக்குற்றிகளை இழுக்கச் செய்தலுக்காக நாளொன்றுக்கு | 500 0 |
| நிர்மாண மற்றும் ஏனைய இயந்திரப் பொறிகள் (செய்ன், லோடர் அல்லாத) நாளொன்றுக்கு | 1,000 0 |
| 3. விவசாயப் பொருட்களை ஏற்றிச்செல்லல் | |
| (1) தினந்தோறும் அல்லது மாதமொன்றில் 05 நாட்களிலும் கூடிய | 200 0 |
| (2) தினந்தோறும் அல்லாத மாதமொன்றில் 05 நாட்களிலும் குறைந்த | 100 0 |

8-229/4